**தலைப்பு 264 – யாழ்ப்பாண மாவட்டச் செயலகம்/ கச்சேரி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், தலைப்பு 264 இன் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தெம்பர் 23 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல்வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மாவட்டச் செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 731.64 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை ரூபா 726.99 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, தேறிய நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 4.65 மில்லியன் தொகை அல்லது தேறிய நிதியேற்பாடுகளில் 0.64 சதவீதமாக இருந்தது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 653.99 | 649.34 | 4.65 | 0.71 |
| மூலதனம் | 77.65 | 77.65 | - | 0 |
| மொத்தம் | **731.64** | **726.99** | **4.65** | 0.64 |

#### (ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைத்த நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு நடவடிக்கைகளிற்காக 28 அமைச்சுக்கள் மற்றும் 19 திணைக்களங்களிடமிருந்து ரூபா 2,147.53 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில், ரூபா 2,030.99 மில்லியன் கூட்டுமொத்தமான தொகைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன்படி, சேமிப்பு ரூபா 116.54 மில்லியனாக இருந்ததுடன் இது பெறப்பட்ட மொத்த நிதியேற்பாடுகளில் 5.42 சதவீமாக இருந்தது.

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் கீழே தரப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 26401 | 49.00 | 47.04 | 32.00 | 40.58 | 120.00 | 113.17 |

### 2.2.2 கட்டுநிதிக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் 7000/0000/00/0282/0015/000 ஆம் இலக்க கட்டுநிதி கணக்கின் மீதி ரூபா 12,812,291 தொகையாகும்.

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 08 வைப்புக் கணக்குகளின் மொத்த மீதி ரூபா 126,842,705 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இல. | தொகை |
|---|---|
| | ரூபா |
| 6000/0000/00/0002/0090/000 | 90,000 |
| 6000/0000/00/0013/0059/000 | 38,688,453 |
| 6000/0000/00/0014/0006/000 | 693,000 |
| 6000/0000/00/0016/0041/000 | 62,197,327 |
| 6000/0000/00/0017/0012/000 | 3,722,240 |
| 6000/0000/00/0018/0053/000 | 52,686 |
| 6000/0000/00/0019/0008/000 | 6,020,120 |
| 6000/0000/00/0020/0002/000 | 15,378,879 |
| **மொத்தம்** | **126,842,705** |

### 2.4 கணக்காய்வு அவதானிப்பு

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிற்குட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தி முதல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. கணிசத்தன்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 கணக்குகளின் சமர்ப்பிப்பு

மாவட்டச் செயலகம் 2016 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்காக வருமான கணக்கை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் கணக்கானது 2016 ஒக்தோபர் 10 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்டச் செயலகம் பின்வரும் பதிவேடுகளைப் பேணியிருக்காத அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகளை முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணியிருக்கவில்லை என கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|
| கட்லொக் புத்தகங்கள் | கச்சேரி கைநூல் 5:9 | பேணப்பட்டிருக்கவில்லை |
| தொலைபேசிப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1), 846(3) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| கணனிகள், உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 இன் ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.3.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆறு மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,204,000 ஆரம்ப நிதியேற்பாடு ஆறு சந்தர்ப்பங்களில் 22 சதவீதம் தொடக்கம் 66 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருந்த அதேநேரம் ஏனைய ஐந்து மீண்டெழும் நிதியேற்பாடுகள் 12.8 சதவீதம் தொடக்கம் 141.2 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருந்தன. ஆகையால், முறையான நிதித் திட்டமில்லாமல் செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததை இது வெளிப்படுத்தியது.

(ஆ) ஏழு மீண்டெழும் செலவின விடயங்களிற்கிடையில் 8 சதவீதம் தொடக்கம் 66 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 6,254,000 கூட்டுத்தொகையான சேமிப்புக்களின் மாற்றத்திற்கான திருப்திகரமான காரணங்கள் தரப்பட்டிருக்கவில்லை.

**3.4 கட்டுநிதிக் கணக்கு**

---

பெறப்பட்ட செயல்நிமித்தக் கட்டுநிதிகள் நிதிப்பிரமாணம் 371 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நோக்கம் பூர்த்தியடைந்த பின்னர் உடனடியாகத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 25,000 கூட்டுமொத்தமான செயல்நிமித்தக் கட்டுநிதிகள் நோக்கங்கள் பூர்த்தியடைந்ததிலிருந்து 08 மாதங்கள் தொடக்கம் 10 மாதங்கள் வரையான வீச்சிலான காலதாமதங்களின் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

**3.5 பொது வைப்புக் கணக்கு**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு நடவடிக்கைகளிற்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைக்கப்பெற்றிருந்த நிதியேற்பாடுகளில் 31 நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ரூபா 1,077,385 தொகை குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 32,378,590 தொகையான வழி அனுமதிப்பத்திர சேகரிப்புக்களானது 2003 மே 07 இன் என்ரீசீ/பிஓஎல்/98/22 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு கடிதத்தின் பிரகாரம் வருமானக் கணக்கிற்கு அனுப்பப்படாமல் பதவியணியினர் சம்பளம், ஊக்குவிப்பு, மேலதிகநேரம், மின்சாரம், பிரயாணக் கோரிக்கைகள் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் போன்ற வெவ்வேறு நோக்கங்களிற்காக ரூபா 5,322,485 ஏற்பட்ட பின்னர் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு**

---

26401 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

தாபன விதிக்கோவையின் XXIV ஆம் இலக்க அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி வறிதாக்கப்பட்ட, ஓய்வுபெற்ற மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குட்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 145,020 தொகையான நிலுவை மீதியினை அறவிடுவதற்கோ அல்லது தேவையான சீராக்கங்களை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்களின் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

---

(i) மீளாய்வாண்டிற்கான கணக்கெடுப்புச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் செய்யப்பட்ட ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 757 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 435 கிராம சேவகர் அலுவலகங்களில் களஞ்சியப் பொருட்கள் மீதான வருடாந்த மெய்மையாய்வு மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்தால் நியமிக்கப்பட்ட கணக்கெடுப்புச் சபையால் சரிபார்க்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) உடமையாக்கப்பட்டிராத சொத்துக்களின் பாவனை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

காரைநகர் பிரதேச செயலகத்திற்கான அலுவலகக் கட்டிடம் 2013 ஆம் ஆண்டின் போது தனியார் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணியின் உரிமைத்துவம் இந்த அறிக்கைத் திகதிவரை செயலகத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிடத்தின் வரலாற்றுக் கிரயம்/ புத்தகப் பெறுமதியை பரீட்சிப்பதற்கு தொடர்புடைய கோவை கணக்காய்விற்காக கிடைத்திருக்கவில்லை.

**(இ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது 06 மோட்டார் வாகனங்கள் 04 தொடக்கம் 05 வரையான ஆண்டுகளாக விளைவற்று அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.8 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | | |
| நிதிப்பிரமாணம் 115 | 924,950 | முன்னைய ஆண்டு செலவினம் முறையான அதிகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் செய்யப்பட்டிருந்தது. |
| **(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கைகள்** | | |
| 1990 ஒக்தோபர் 10 இன் 41/90 ஆம் இலக்கம் | - | மாவட்ட செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களின் 39 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு ஆறு மாதங்களிலும் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை |
| **(இ) திறைசேரிச் சுற்றறிக்கைகள்** | | |
| 2004 பெப்ரவரி 24 இன் 01/2004 ஆம் இலக்கம் | - | மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழான செயற்திட்டங்களை அமுலாக்கல்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதத்திற்கான சந்தர்ப்பம் கீழே தரப்படுகின்றன.

### (அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

மாவட்டச் செயலகத்தால் நான்கு மாடி நிர்வாகக் கட்டிடம் நிர்மாணத்தல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் போது மாவட்டச் செயலக நிர்வாகக் கட்டிடத்தின் நிர்மாண வேலைகளிற்காக ரூபா 24.08 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்த நிர்மாண வேலைகளின் கட்டம் - VI இல் பௌதீக வேலைகளில் 90 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில், கருத்திற்கொள்ளக் கூடியளவு காலதாமதங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. கட்டிட நிர்மாண வேலைகளின் தொடக்கம் 2011 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆரம்பித்த ஆண்டிலிருந்து ரூபா 77.78 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இந்த அறிக்கை திகதி வரை ரூபா 70.73 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| ஆண்டு | ஒதுக்கீடு | செலவினம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2011 | 19,500,000 | 19,500,000 |
| 2012 | 5,000,000 | 4,958,478 |
| 2013 | 17,192,000 | 17,192,000 |
| 2014 | 12,000,000 | 12,000,000 |
| 2015 | 24,086,000 | 17,086,839 |
| | **77,778,000** | **70,737,317** |

## 3.10 செயலாற்றல்கள்

2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் செயன்முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

மீளாய்வாண்டின் போது அனர்த்த முகாமைத்துவச் சேவைப் பிரிவால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்த கிராமிய மட்டத்திலான குழுக்களின் நியமனங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.11 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

கடைசி ஒன்றரை ஆண்டுகளிற்கு மேலாக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கங்களால் நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத நபர்களால் மாவட்ட செயலகம் மற்றும் வலிகாமம் தெற்கு பிரதேச செயலகம் என்பவற்றிற்கு வருகைதரும் பொதுமக்களிடமிருந்து அலுவலக வளாகத்தில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் தரிப்பதற்காக ரூபா 2 தொடக்கம் ரூபா 10

வரையிலான பல்வேறு விலைவீதங்களில் வாகன தரிப்பிட கட்டணங்களை அறவிடுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். முறைமையை முறைப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12 முகாமைத்துவப் பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

**தீவகம் வடக்கு பிரதேச செயலகம்**

அனலைதீவு குடியிருப்பு வீதியின் மீள்நிர்மாணத்திற்காக தனியார் நிறுவகமொன்றிற்கு ரூபா 415,900 பெறுமதி சேர் வரி (வற்) செலுத்தப்பட்டிருந்த போதிலும் மேற்படி வற் கொடுப்பனவு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. பின்னர், குறித்த நிறுவகத்தின் வற் பதிவு செயலற்றுள்ளது என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்திருந்ததுடன் மேற்படி வேலையின் ரூபா 194,087 தொகையான நிறுத்திவைத்தல் பணம் வற் கொடுப்பனவை தீர்ப்பனவு செய்வதற்கு வருமானக் கணக்கிற்கு செலுத்தப்படிருந்ததுடன் 2016 நவம்பர் 30 வரையிலும் வற் தொகையின் ரூபா 221,813 மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.13 நட்டங்களும் சேதங்களும்**

14 ஆண்டுகள் தொடக்கம் 28 ஆண்டுகள் வரையான வீச்சிலான காலப்பகுதியிலிருந்து பல்வேறு காரணங்களினால் ரூபா 2,403,388 கூட்டுத்தொகையான நட்டங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன. இது தொடர்பில் கணக்கிலிருந்து இத் தொகையை திருத்தி தெளிவுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.14 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட, பின்தொடர் நடவடிக்கை முடிவுறுத்தப்பட்டிருக்காத மாவட்டச் செயலகத்துடன் தொடர்புடைய கணக்காய்வுப் பந்திகளிற்கான தொடர்பு கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்பின் கீழான விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2013 | 1.14 | தனியார் பயணிகள் கப்பல் சேவைகளின் வேலை தொடர்பான கொடுப்பனவாக முன்னாள் மாவட்டச் செயலாளர் உள்ளடங்கலாக 27 உத்தியோகத்தர்களுக்கு ஊக்குவிப்புப் படியாக 2012 மே 02 இல் ரூபா 3.425 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பயணிகள் கப்பல் சேவைகள் 2009 மார்ச் மாதத்திலிருந்து நிறுத்தப்பட்டதுடன் அந்த வேலைகள் தொடர்பான கொடுப்பனவானது சம்பளங்கள் மற்றும் மேலதிகநேரக் கொடுப்பனவு மற்றும் ஏனைய படிகளிற்கு மேலதிகமாக உத்தியோகத்தர்களிற்கு நாளொன்றிற்கு ரூபா 500 விலைவீதத்தில் ஏற்கனவே செலுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டின் போது தனியார் பயணிகள் கப்பல் தொடர்பில் எத்தவொரு உத்தியோகத்தராலும் விசேட வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2015 யூன் 29 தொடக்கம் 2016 ஒக்தோபர் 31 வரையான காலப்பகுதியின் போது அந்த |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2,603,200 கூட்டுமொத்தமான தொகைகள் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. |
| 2013 | 1.11 (ஆ)(i) | மாவட்ட செயலகத்துக்கு சிவில் பொறியியலாளர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாளரிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்டப மீள்நிர்மாணத்தின் மேற்பார்வைக்காக 2013 யூன் 10 இல் திணைக்கள கொள்வனவு குழுவால் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்த இரண்டு வெளித்தரப்பு உத்தியோகத்தர்களிற்கு பொது வைப்புக் கணக்கிலிருந்து ரூபா 180,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்த விடயத்தை தெளிவுபடுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 3.4.2 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மூலம் கிடைக்கப்பெற்றிருந்த நிதியேற்பாடுகளிலிருந்து அதற்காக எடுக்கப்பட்ட மாவட்ட கொள்வனவுக் குழுத் தீர்மானத்திற்கு முரணாக 2014 நவம்பர் 14 இல் தென்மராட்சி பிரதேச செயலகத்தால் ரூபா 3,299,259 பெறுமதிக்கு நூற்றி நாற்த்தியொரு தையல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இது தொடர்பில் வழங்குநருக்கு ரூபா 479,400 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. மேலதிகக் கொடுப்பனவை அறவிடுவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.15 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 47 | 46 | 01 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 32 | 19 | 13 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 954 | 1,013 | - | 59 |
| (iv) | ஆரம்ப நிலை | 225 | 194 | 31 | - |
| | **மொத்தம்** | **1,258** | **1,272** | **45** | **59** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மாவட்ட செயலகமானது அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது முகாமைத்துவ உதவியாளர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 59 மிகைப் பதவியணியினருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து முறையான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு தவறியிருந்தது.